## மொறட்டுவ பல்கலைக்கழக தொழில்நுட்ப நிறுவகம் - 2016

---

மொறட்டுவ பல்கலைக்கழக தொழில்நுட்ப நிறுவகத்தின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 18 ஆம் பிரிவின் பிரகாரம் விதிக்கப்பட்டுள்ள 2000 இன் 03 ஆம் இலக்க மொறட்டுவ பல்கலைக்கழக தொழில்நுட்ப நிறுவக சட்டவாக்கத்தின் 20 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 108(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிறுவனத்தின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்கத் தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிறுவகத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிறுவகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்தில்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 111 ஆம் பிரிவு கணக்காய்வின் நோக்கெல்லையும் அளவையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிவு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினைத் தவிர, மொறட்டுவ பல்கலைக்கழக தொழில்நுட்ப நிறுவகத்தின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம்

இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 07 இன் பிரகாரம் நடைமுறையல்லாச் சொத்துக்களுக்காக பயன்தரு ஆயுட்காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யாமையின் காரணமாக ரூபா 41,497,929 கிரயமான ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் முழுமையாகப் பெறுமானத் தேய்வு செய்யப்பட்டிருந்தும் தொடர்ந்தும் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் பெறுமானத்தேய்வு விகிதாசாரத்தை மதிப்பீடு செய்யும் போது ஏற்படும் வழுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 03 இன் பிரகாரம் திருத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

#### 2.2.2 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிதிநிலைமைக் கூற்றின் பிரகாரம் நீண்ட கால முதலீடுகளின் பெறுமதி ரூபா 14,433,695 ஆக இருந்த போதிலும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ள பட்டோலைகளின் பிரகாரம் அப் பெறுமதி ரூபா 14,628,056 ஆகக் காண்பிக்கப்பட்டமையால் ரூபா 194,361 தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

(ஆ) மீளாய்வாண்டின் தேசிய தொழில்நுட்ப டிப்ளோமாக பாடநெறிக்காக (NDT) விண்ணப்பக் கட்டண வருமானம் ரூபா 884,456 ஆக இருந்த போதிலும், பட்டோலையின் பிரகாரம் அது ரூபா 907,050 ஆனமையால் ரூபா 22,594 தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

## 2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

வெளிநாட்டுக் கற்கை விடுமுறை பெற்றுச் சென்ற விரிவுரையாளர்களிடமிருந்தும் மற்றும் பிணை முறிகளை மீறியதன் காரணமாக அறவிடவேண்டிய ரூபா 1,572,914 தொகை பல்கலைக்கழக சேமலாப நிதியத்திலிருந்து அறவிடுவற்காக விரிவுரையாளர்களினால் 2016 சனவரி 26 ஆந் திகதி இணக்கப்பாடு தெரிவிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் நிறுவனத்தினால் இந்தப் பணத்தை பல்கலைக்கழக சேமலாப நிதியத்தலிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு 2016 ஆகஸ்ட் 26 ஆந் திகதி பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கு அறிவிக்கப்பட்டிருந்த போதிலும், 2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அந்தப் பணம் அறவிடப்பட்டிருக்கவில்லை.

## 2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|---|
| (அ) | 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச் சட்டத்தின் 45(2)(1)(xv) ஆம் இலக்கப் பிரிவு | பல்கலைக்கழகத்திற்கு ஏதாவது பணமொன்று இருந்த போதிலும், சட்டரீதியாக முதலீடு செய்யக்கூடிய ஏதாவது சேமிப்புப் பத்திரங்களில் முதலீடு செய்தல் அல்லது ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட ஏதாவது வங்கியொன்றில் நிலையான வைப்புப் பணமாக வைப்புச் செய்தல் கட்டுப்பாட்டுச் சபையின் பணியாகக் குறிப்பிடப்பட்ட போதிலும், 2017 மார்ச் 20 ஆந் திகதி வரையிலும், ரூபா 1,494,483 தொகையான 04 நிதியங்கள் ஸ்தாபிக்கப்பட்டு 10 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த போதிலும், எந்தவொரு முதலீட்டு நடவடிக்கைகளிலும் ஈடுபடுத்தாது தொழில்நுட்ப நிறுவகத்தின் நடைமுறைக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. |
| (ஆ) | உள்நாட்டு இறைவரிச் சுற்றறிக்கை 07 உழைக்கும்போதே செலுத்தும் வரி | மொறட்டுவ பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட உதவி நிதியாளராக சேவையாற்றி ஏழுவருட விடுமுறை பெற்றிருந்த தொழில்நுட்ப நிறுவகத்தின் சிரேஷ்ட உதவி நிதியாளராக சேவையாற்றிய உத்தியோகத்தருக்கு 2015 திசெம்பர் 31 முதல் 2016 யூலை 31 வரையான காலத்திற்காக மாதாந்தம் ரூபா 69,152 வீதம் 08 மாதங்களுக்காக செலுத்தப்பட்ட ரூபா 553,216 கூட்டுத்தொகையான சம்பளத்தின் அடிப்படையில் 16 சதவீதமான உழைக்கும் போதே அறவிடும் வரி அறவிடப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (இ) | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் நிதிச் சுற்றறிக்கை கடித இலக்கம் 2/2015 இன் விடய இலக்கம் II | ஏதாவது ஒரு மாதமொன்றில் செலுத்தப்படாத மஹபொல புலமைப்பரிசில் பணம் அடுத்துவரும் மாதத்தின் 20 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் மஹபொல நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கு மீள அனுப்பப்பட வேண்டிய போதிலும், 2015 ஆம் ஆண்டு முதல் கொண்டுவரப்படுகின்ற ரூபா 384,600 மீதியொன்று 2016 திசெம்பர் 31 வரையும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2016 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிறுவகத்தின் நிதிவிளைவுகள் ரூபா 2,698,268 மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 3,754,212 பற்றாக்குறையாக இருந்தமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 6,452,480 அதிகரிப்பு ஏற்பட்டிருந்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் மீண்டெழும் செலவினத்திற்காகக் கிடைத்த அரசாங்க மானியம் ரூபா 28,900,000 இனால் அதாவது 23 சதவீதத்தால் அதிகரித்தமை மேற்கூறப்பட்ட முன்னேற்றத்திற்கு காரணமாக இருந்தது.

மீளாய்வாண்டினதும் கடந்த 04 ஆண்டுகளினதும் நிதிவிளைவுகளைப் பகுப்பாய்வு செய்தபோது 2012 ஆம் ஆண்டில் காணப்பட்ட ரூபா 3,510,686 தொகையான பற்றாக்குறை 2016 ஆம் ஆண்டளவில் ரூபா 2,698,268 மிகைக்குள்ளாகியிருந்ததுடன் இந்தக் கால எல்லையில் நிதிவிளைவுகளில் கவனத்தில் கொள்ளக்கூடிய முரணொன்று அவதானிக்கப்பட்டது. எவ்வாறாயினும் நிதி விளைவில் ஊழியர் ஊதியம் சீராக்கப்பட்டதன் பின்னர் 2012 ஆம் ஆண்டின் போது ரூபா 59,256,335 தொகையான நிறுவனத்தின் பங்களிப்பு தொடர்ச்சியாக அதிகரித்து மீளாய்வாண்டின் போது ரூபா 129,448,778 ஆக இருந்தது.

### 3.2 நிறுவகத்தினால் ஆரம்பிக்கப்பட்டுள்ள சட்ட விடயங்கள்

நிறுவகத்தினால் வெளிநிறுவனங்களுக்கு எதிராக ரூபா 05 மில்லியன் நட்டஈடு கோரி மொறட்டுவ மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கொன்று தொடரப்பட்டிருந்ததுடன் அந்த வழக்கின் பிரதிவாதியினால் அந்த வழக்கு தொடர்பான பிணையொன்று சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. இது தொடர்பாக கணக்குகளில் வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

பட்டப்பின்இரண்டாம் தொழில்நுட்ப நிறுவனத்துடன் இணங்குகின்ற வகையில் பௌதீக சூழலொன்றை ஏற்படுத்துவதற்கும் மாணவர்களுக்கு சமூகத்தினதும் கைத்தொழில்துறைகளினதும் தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய மற்றும் இலகுவாக அடையக்கூடிய கற்பித்தல் மற்றும் திறன் பயிற்சியளித்தல் திட்டமொன்றை வடிவமைப்பதற்கும், பிரயோகரீதியில் பொருத்தமான ஆராய்ச்சினை ஊக்குவிக்கின்ற சூழலொன்றை தாப்பிப்பதற்கும், தகைமைபெற்ற செயற்பாடுள்ள குழுவொன்றை உருவாக்குதல் மற்றும் மாணவர்களின் முழுமையான அபிவிருத்தி மேம்பாட்டை ஏற்படுத்துகின்ற சுற்றாடலை வடிவமைத்தல் மற்றும் நிறுவகத்தின் சகல துறைகளிலும் தரத்தையும் செயற்திறனையும் உறுதிப்படுத்துகின்ற முகாமைத்துவ முறைமையொன்றை

மேம்படுத்தும் நோக்கத்துடன் மொறட்டுவ பல்கலைக்கழகத்திற்கு இணைந்த நிறுவனமொன்றாக இந்த நிறுவனம் தாபிக்கப்பட்டுள்ளது.

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளின் போது விளையாட்டுப் பொருட்களைக் கொள்வனவு செய்வதற்காக ரூபா 100,000 வீதம் செலவிடுவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், அந்த ஆண்டின் போது அதற்காக எத்தொகையும் செலவிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நிறுவகத்தில் 09 கற்கைப் பிரிவுகள் அமுல்படுத்தப்பட்டிருந்ததுடன் 2013/2014, 2014/2015 ஆம் கல்வி ஆண்டுகளில் 03 கற்கைப் பிரிவுகளுக்கு சேர்க்கப்பட வேண்டிய மாணவர்களின் எண்ணிக்கையையும் சேர்க்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கையும் ஒப்பீடு செய்த போது முறையே 6 சதவீதம் முதல் 47 சதவீதம் வரையிலான வீச்சில் 11 மாணவர் வெற்றிடங்களும், 5 சதவீதம் முதல் 40 சதவீதம் வரையிலான வீச்சில் 09 வெற்றிடங்களும், 2015/2016 ஆம் கல்வி ஆண்டில் 02 கற்கைப் பிரிவுகளில் 33 சதவீதம் முதல் 40 சதவீதம் வரையில் 06 மாணவர் வெற்றிடங்களும் காணப்பட்டன.

(இ) (i) 2016 ஆம் ஆண்டின் போது முதலாவது வருட பரீட்சைக்குத் தோற்றிய 504 மாணவர்களில் 334 மாணவர்கள் மாத்திரம் பரீட்சையில் சித்தியடைந்திருந்ததுடன் மாணவர்களில் 34 சதவீதத்தினர் பரீட்சையில் சித்தியடைந்திருக்கவில்லை. அந்த சித்தியடையாத மாணவர்கள் தொடர்பாக பரீசித்த போது எந்திர பொறியியலாளர் பிரிவிலிருந்து பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களில் 36 சதவீதமும் நெசவு மற்றும் ஆடைகள் தொழில்நுட்ப பிரிவிலிருந்து தோற்றிய மாணவர்களில் 39 சதவீதமும் சித்தியடைந்திருக்கவில்லை.

(ii) 2016 ஆம் ஆண்டின் போது இரண்டாவது வருட பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்கள் 484 பேரில் 357 பேர் மாத்திரம் பரீட்சையில் சித்தியடைந்திருந்துடன் மாணவர்களில் 27 சதவீதத்தினர் பரீட்சையில் சித்தியடைந்திருக்கவில்லை. அந்த இரண்டாம் வருட சித்தியடையாத மாணவர்கள் தொடர்பாக பரீட்சித்த போது எந்திர பொறியியலாளர் பிரிவிலிருந்து பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களில் 41 சதவீதமும் நெசவு மற்றும் ஆடைகள் தொழில்நுட்பப் பிரிவிலிருந்து தோற்றிய மாணவர்களில் 35 சதவீதமுமாக சித்தியடைந்திருக்கவில்லை.

(ஈ) மாணவர்களின் போட்டித் தன்மையினை அதிகரிப்பதற்காக 09 கல்விசார் பிரிவுகளின் மூலம் பாடவிதானம் சார்ந்த 03 நிகழ்ச்சித்திட்டங்கள் வீதமும் பாடவிதானத்திற்குப் புறம்பான 03 நிகழ்ச்சித்திட்டம் வீதமும் அமுல்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், கற்கைப் பிரிவுகள் ஒன்றிணைந்து ஒரு கண்காட்சியும் ஒரு விளையாட்டு நிகழ்ச்சித்திட்டமும் மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தது.

(உ) 2016 ஆம் ஆண்டில் மாணவர்களுக்காக புதிதாக தகவல் தொழில்நுட்பம் (IT) மற்றும் அளவிடை மதிப்பீடு (QS) என்ற 02 பாடநெறிகளை அறிமுகப்படுத்துவதற்கு முன்மொழியப்பட்டிருந்த போதிலும் அந்தப் பாடநெறிகள் 2016 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்ர்லை.

(ஊ) புத்தாக்கம் மற்றும் வடிவமைப்புத் தன்மையை உயர்வடையச் செய்வதற்காக 2016 ஆம் ஆண்டின் போது ரூபா 1,000,000 தொகையான நிதிஏற்பாடு ஆராய்ச்சிக்காக ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், நிதிஏற்பாட்டுத் தொகையிலிருந்து 48 சதவீதம் அதாவது ரூபா 478,215 தொகை செலவிட்டு 39 ஆராய்ச்சிகள் மாத்திரம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

**4.2 பதவியணியினர் நிர்வாகம்**
---------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிறுவகத்தின் கல்விசார் மற்றும் கல்விசாரா பதவியணியில் வெற்றிடங்கள் முறையே 28 பேரினையும், 11 பேரினையும் உள்ளடக்கியிருந்ததுடன் அது முறையே 48 சதவீதம் மற்றும் 20 சதவீதமாக இருந்தது.

(ஆ) பல்கலைக்கழக தாபன விதிக்கோவையின் III ஆவது அத்தியாயத்தின் 18.1 (1) ஆம் பிரிவின் பிரகாரம் உயர் கல்வி நிறுவனமொன்றில் ஊழியர் எண்ணிக்கைகளில் வெற்றிடம் ஏற்படும் என அறிந்ததும் உடனடியாக உரிய நியமன அதிகாரி அந்த வெற்றிடத்தை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்த போதிலும் 2015 சனவரி 15 முதல் காணப்பட்ட நிறுவகத்தின் பிரதி நிதியாளர் பதவி 2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் நிரப்புவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) தகைமைபெற்ற பதவியணியொன்றை ஏற்படுத்தும் நோக்கத்துடன் மீளய்வாண்டின் போது 50 வெளி விரிவுரையாளர்களை ஆட்சேர்ப்பதற்காக ரூபா 15,000,000 தொகை ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், ரூபா 14,957,457 தொகை செலவில் 21 வெளி விரிவுரையாளர்களும் மற்றும் அதற்கு மேலாக 35 மதியுரையாளர்களும் சேர்க்கப்பட்டிருந்தனர்.

**5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**
---------------------------------------------------------------

**5.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்**
-----------------------------------------------------------

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பந்தியின் பிரகாரம் கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் உரிய ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் மற்றும் வரைவு ஆண்டறிக்கை என்பன கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், 2016 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 2017 ஏப்ரல் 28 ஆந் திகதியே சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

**5.2 உள்ளகக் கணக்காய்வு**
------------------------------------------

உள்ளகக் கணக்காய்வு தொடர்பாக டீ.எம்.ஏ/2009(1) ஆம் வழிகாட்டியின் 3 ஆம் பந்தியின் பிரகாரம் தனியான உள்ளகக் கணக்காய்வுப் பிரிவொன்று தாபிக்கப்பட்டிருக்கவில்லை.

**6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**
------------------------------------------------

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் அவ்வப்போது நிறுவகத்தின் பணிப்பாளரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டிருந்தது. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

| **முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள்** | **இணங்காமைகள்** |
| --- | --- |
| (அ) பதவியணியினர் நிர்வாகம் | வெற்றிடமான பதவிகளை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்காமை. |
| (ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு | பாதீடு சரியான எதிர்வு கூறலின்றி தயாரிக்கப்பட்டிருந்தமை |
| (இ) நிதிய முகாமைத்துவம் | ஆரம்பிக்கப்பட்ட நிதியங்களின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்காமை |
| (ஈ) செயற்பாட்டு நிர்வாகம் | உடன்படிக்கை மற்றும் பிணைகளை மீறுதல் தொடர்பாக முறையான நடவடிக்கை எடுக்காமை. |